# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ்:1 • 26.11.2018

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## உலகம் முழுவதும் மாவீரர் நாள் ஏற்பாடுகள் நிறைவு!





## அன்பிற்கு அகவை 64

உலகத் தமிழினம் கொண்டாட்டம்





## ஈரானில் நிலநடுக்கம் 716 பேர் படுகாயம்

## இலங்கையின் தற்போதைய அரசியல்நிலை யாருக்கு இலாபம்?





## அச்சுறுத்தலுக்கு மத்தியில் துயிலுமில்லப் பணிகள்

## கிறிஸ்மஸ் தாத்தா ஆணா? பெண்ணா?

வெடித்தது சர்ச்சை!



# மறைமுக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும்

## உணர்வெழுச்சியோடு யாழ் பல்கலைக் கழக கல்விச்சமூகம்



மறைமுக அச்சுறுத்தலுக்கு மத்தி யிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாத்தில் மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாளினை நினைவு கொள்ளத் தயாராகிவருகின்றார்கள். தமிழர்களின் மீதான அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து உரிமையமீட்க போராடிய சமூகமாக அன்று தொட்டு இன்றுவரை மாணவ ர்கள் காணப்படுகின்றார்கள். எமது மாணவர்கள் மீது பல்வேறு அடக்குமுறைகளையும் தரப்படுத்தல்களையும் மேற்கொண்ட பெரும்பான்மை இனத்தவர்களும் ஆளும் வர்க்கமும் தமிழர்களை திட்டமிட்டு நசுக்க முற்பட்ட போதெல்லாம் மாணவர்கள் முன்வந்து தங்கள் உரிமைக்காக போராடினார்கள் அவ்வாறு போராடியவர்கள் துப்பாக்கி முனையில் வீழ்த்தப்பட்டார்கள். பொன் சிவகுமாரன் முதல் பல மாணவர்கள் தமிழர்களின் கல்வி உரிமைக்காக தங்கள் உயிர்களை தாய்மண்ணில் சாய்த்தார்கள். அவர்களின் ஈகங்களை எவராலும் அழித்து விட முடியாது.

மாணவர்களின் உணர்வுகளை எவராலும் அடக்கமுடியாது என்பதுடன் மாணவர் சக்தி; மாபெரும் சக்தி என்பதாக மீண்டும் எங்கள் மாணவர்கள் தங்கள் உணர்வுகளை உள்ளக்கிடக்கைகளை யாழ் பல்கலைக்கழகத்தில் வெளிக்கொணர்ந்துள்ளார்கள். பொங்குதமிழ் ஊடாக சங்குமுழங்கிய யாழ் பல்கலைக்கழக வளாகம் மாவீரர்களின் தியாகங்களுக்காகவும் சிங்களதேசத்தால் நசுக்கப்பட்ட எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், புத்தி ஜீவிகள் பலர் இந்த மண்ணில் புதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் நவம்பர்27 இல் பல்கலைக் கழக மாணவர்கள் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

# அன்பிற்கு அகவை 64

## உலகத் தமிழினம் கொண்டாட்டம்



தமிழீழத் தேசியத் தலைவரது 64வது அகவை நாள் கொண்டாட்டங்கள் உலகத் தமிழர்கள் வாழும் தேசங்கள் எங்கும் உணர்வெழுச் சியோடு இடம் பெற்று வருகின்றன. இந்தப் பூமிப் பந்தில் தமிழினத்தின் இருப்பையும் வீர வரலாற்றையும் தனது தலைமையிலான விடுதலைப் போராட்டத்தின் மூலம் உலகறியச் செய்த வீரத் தலைவனை உலகத் தமிழினம் நன்றியோடு நினைவு கூர்கின்றது. எழுத்துக்களால் முழுமைப்படுத்த முடியாத எங்கள் தலைவனின் பிறப்பும் எழுச்சியும் வாழ்வும் பிரபஞ்சத்தில் கடைசித் தமிழன் வாழும் வரைக்கும் நிலைத்து நிற்கும். உலக வரலாறு காலம் கடந்தே வல்லமைகளை பூசிக்கும். இதுவே எங்கள் தலைவன் விடயத்திலும் நடக்கும். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவனாய் எங்கள் இதயங்களில் என்றும் உயர்ந்து நிற்பார்.

# சபாநாயகர் மீது ஆசிட் வீசவும் முயற்சி? விசாரணையை ஆரம்பித்த போலிசார்

பாராளுமன்றத்தில் நவம்பர் 16ஆம் தேதி இடம்பெற்ற மோதல்களின் போது சபாநாயகர் மீது அசிட் வீசுவதற்கான சதித் திட்டம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக சபாநாயகர் எச்சரிக்கப்பட்டு இருப்பதுடன் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுமாறு அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சபா மண்டபத்துக்கு அவர் வருகை தரும்போது போலீசார் அடங்கிய குழு அவருக்கு பாதுகாப்பாக வந்திருந்தது. அந்த வேளையில்தான் அவர் மீது அசிட் வீசுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இதுதொடர்பாக சபாநாயகருடன் கேட்டபோது விசாரணைகள் இடம்பெறும் நிலைமையில் அது தொடர்பாக கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

பாலித தேவப்பெரும, ரஞ்சன் ராமநாயக்கா ஆகியோர் கத்தி கொண்டுவந்த குற்றச்சாட்டு, மிளகாய் தூள் கலந்த தண்ணீர் போலீசார் மீது வீசப்பட்டமை குறித்த குற்றச்சாட்டு தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

நண்பகல் 1.25 மணி அளவில் சபையின் சபா மண்டபத்தில் சபாநாயகர் செல்வதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் எம்பிக்கள் குழு ஒன்று சபாநாயகரின் ஆசனத்தை ஆக்கிரமித்தது.

அத்துடன் அவர்கள் நுழைவாயிலை மூடி இருந்தார்கள். இதனால், மாற்று திட்டம் தயாரிக்கப்பட்டது. பொலிசாருடன் சபாநாயகர் அழைத்துவரப்பட்டார். பக்கத்தில் உள்ள நுழைவாயிலில் அவரை அழைத்து வரப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அச்சுறுத்தலுக்கு மத்தியில் மட்டக்களப்பு துயிலுமில்லப் பணிகள்

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக




பிரதேச இளைஞர்களாலும் மக்களாலும் இடம்பெற்ற மாவீரர் நாள் ஆயத்தப் பணியினை இலங்கை இராணுவத்தின் கைக்கூலிகளும், இலங்கை இராணுவப் புலனாய்வாளர்களும் நேரடியாகவும் தொலைபேசி அழைப்பு மூலமாகவும் மிரட்டி முடக்க முயன்றனர். மற்றும் பணியினை மேற்கொண்ட இளைஞர்களின் புகைப்படங்களை இராணுவப் புலனாய்வாளர்களுக்கு வழங்கி நேரடியாக அவர்களால் மாவீரர் நாளுக்காக வேலை செய்த இளைஞர்களும் மக்களும் விசாரணை செய்யப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து இன்று அதிகாலையிலிருந்து மாவீரர் நாள் பணியினை பிரதேச மக்களும் இளைஞர்களும் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த கொக்கட்டிச்சோலை பிராந்திய பொறுப்பதிகாரியும் மற்றும் சில பொலிஸாரும் இராணுவத்தினரும் பணி செய்து கொண்டிருந்த இளைஞர்களிடமும் மக்களிடமும் உடனடியாக துயிலும் இல்லத்தை விட்டு வெளியேறுமாறும் மாவடிமுன்மாரி துயிலும் இல்லம் அமைந்துள்ள இடம் அரச காணி எனவும் அதில் நடப்பட்டுள்ள நினைவுக்கற்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் மாவீரர் நாள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# இலங்கை வருகின்றார் ஐநா செயலாளர் நாயகம்

இலங்கையில் தற்போது எழுந்துள்ள சிங்கள அதிகார வர்க்கத்திற்கு இடையில் எழுந்துள்ள மோதல் தீவிரம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கையின் இறையாண்மையை நோக்கோடு பல்வேறு ராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளக் கூடும் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளுடனான பேச்சுக்களின் போதே அவர்கள் இனை தெரிவித்துள்ளார்கள்

இராஜதந்திரிகளை தமிழ் கூட்டமைப்பு தூதுக்குழு ஒன்று சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த விடயம் தெரிவிக்கப் படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் 15க்கும் மேற்பட்ட இராஜதந்திரிகள் கலந்துகொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## இலக்கும் நோக்கும்

இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தில் எம் தலைவனின் அகவை நாளும் மாவீரர் நாளும் மீண்டும் எம் வாசலில். தோற்றுப் போய்விட்டோம் அல்லது பாரிய பின்னடைவை சந்தித்து விட்டோம் இனிக் கிடைப்பதைப் பெற்றுக் கொள்ள வேண்டியது தான் என்ற மனப்பாங்கோடு தேசியத் தலைவரின் அகவை நாளையும் மாவீரர் நாளையும் நாம் நினைவு கொள்ள முடியாது. கிடைத்தற்கரிய எமது தலைவனால் கூர்மைப்படுத்தப்பட்ட, செதுக் கப்பட்ட ஒரு பேரினம் அவரது கொள்கை வழியில் நின்று உறுதியோடு களமாடிய மாவீரர் களை வெறுமனே நினைவு கொள்வதென்பது ஒரு வருடாந்த நிகழ்வாகி மட்டும் போய்விட முடியாது. தெளிவான பார்வையும், நல்ல சிந்தனைகளும், சுய நலன்களைக் கடந்த அர்ப்பணிப்புக்களும், பொருத்தமான செயற் திட்டங்களும், ஒருங்கிணைவும் எம்மடையே இருந்தால் இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தில் எந்தத் தடைகளையும் எம்மால் தகர்க்க முடியும். இனியும் எமது அரசியல் விடுதலைக்கான போராட்டத்தை ஆயுதம் கொண்டு தான் நாம் முன்னகர்த்த முடியும். ஆம் அதுதான் அறிவாயுதம்.




பல இலட்சம் மக்களின் உயிரிழப்புக்களோடு வலிகளோடு கொடிய பல இனவழிப்புக்களைச் சந்தித்து, மிகப் பெரும்பான்மையான மக்கள் புலம் பெயர்ந்து, தங்களது அறிவாற்றலால் ஒருங்கிணைவால் பலவீனங்கள் அனைத்தையும் பலமாக மாற்றி விடுதலை அடைந்த ஒரு சின்னஞ் சிறிய தேசம் இன்று பூமிப் பந்தில் உயர்ந்து நிற்கின்றது. யூத இனத்தைப் போல அத்தனை வலிகளையும் இழப்புக்களையும் இனவழிப்புக்களையும் சந்தித்த ஒரு பேரினம் எங்கள் பலவீனங்களை பலமாக மாற்றி ஒருங்கிணைந்து உலக வரைபடத்தில் எமக்கான தேசத்தை நிட்சயமாக உருவாக்க முடியும். இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களால் தான் வரலாற்றைப் படைக்க முடியும் என்ற எங்கள் தலைவனின் நிலைப்பாட்டில் உறுதி கொள்வோம் செயற்படுவோம். அதுவே எங்கள் மாவீரச் செல்வங்களுக்கான உண்மையான வீர வணக்கமாகவும் அமையும். இந்த இலக்கு நோக்கிய இலட்சியப் பயணத்தில் இலக்கு மின்னிதழ் உறுதியோடு என்றும் உங்களோடு கைகோர்த்துப் பயணிக்கும். இந்த மின்னிதழை அனைத்து உலகத் தமிழர்களின் பார்வைக்கும் கொண்டு சேர்க்க வேண்டியதை எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாக ஏற்போம்.

**— ஆசிரியர் பீடம்**

## யாழ் பல்கலைக் கழகத்தில் தேசியத் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம்




தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தில் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடியுள்ளனர். தேசியத் தலைவர் பிரபாகரனின் 64—ஆவது பிறந்த நாள் இன்றாகும். நள்ளிரவு வேளையில் பிறந்த நாள் கேக் வெட்டி பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குள் கொண்டாடியுள்ளனர். தலைவரின் பிறந்தநாள் நிகழ்வை தாயகத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ உணர்வாளர்கள் எழுச்சியுடன் மிக விமர்சையாக கொண்டாடி வருகின்றனர்.

தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு பிரபாகரனின் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் வகையில் பல சுவரொட்டிகள் பல்கலைக்கழகத்திற்குள்ளும் வல்வெட்டித்துறையில் உள்ள அவரின் வீட்டு அருகிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

# மாற்றுத் தலைமை ஒன்றின் தேவையை விக்னேஸ்வரன் நிறைவேற்றுவாரா?

**பூமிகன்**

தென்னிலங்கை அரசியல் மகிந்த ராஜபக்ஷ ‘திடீர்ப் பிரதமராக’ நியமிக்கப்பட்டிருப்பதால் சூடுபிடித்திருக்கின்றது. அனைவருடைய கவனமும் அங்கே திரும்பியிருக்கும் நிலையில், தேர்தல்கள் விரைவில் வரலாம் என்ற எதிர்பார்ப்பும் அதிகரித்திருக்கின்றது. பாராளுமன்ற, மாகாண சபை, ஜனாதிபதித் தேர்தல் என ஒவ்வொன்றாக அடுத்த வருடத்தில் வரப்போகின்றது. தமிழர் தரப்பும் தேர்தலுக்குத் தயாராகவேண்டிய நிலையில் உள்ளது. இந்தப் பின்னணியில், தமிழ்ப் பகுதிகளில் மாற்றம் ஒன்று ஏற்படுமா, கூட்டமைப்புத் தலைமைக்கு சவால்விடக் கூடியதாக மாற்றுத் தலைமை ஒன்று உருவாகுமா என்ற கேள்வி அரசியல் அரங்கில் எழுகின்றது. அது தொடர்பாக இந்த வாரம் ஆராய்வோம்.

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழர் அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றமாக தலைமை மாற்றமும் அமைந்தது. தமிழ் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்களின் அரசியல் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் சென்றடைந்தது. இரு தேர்தல்களில் விடுதலைப் புலிகளின் முழு ஆதரவுடன் தேர்தல் களத்தில் இறங்கியிருந்தவர்கள் என்ற நிலையில் கூட்டமைப்பினரை தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமையாக ஏற்றுக்கொண்டதில் வியப்பில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதன் பின்னரான செயற்பாடுகள் மாற்றுத் தலைமை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருப்பதை அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ் வரனின் பக்கம் அனைவரது பார்வையும் திரும்பியது. ஈழத் தமிழர்களின் அரசியலை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்குத் தலைமை யேற்கக்கூடியவராக விக்னேஸ்வரனையே தமிழ் மக்கள் பார்க்கின்றார்கள். விலைபோகாத, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அடகு வைக்காத, துணிச்சலுடன் பிரச்சினைகளை முன்னெடுக்கக்கூடிய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துச் செயற்படக்கூடிய, மக்களின் அபிமமானத்தைப் பெற்ற ஒருவராக இன்று விளங்குபவர் விக்னேஸ்வரன்



மட்டும்தான். கூட்டமைப்புக்கு மாற்றான ஒரு தலைமை உருவாக வேண்டுமானால் அது விக்னேஸ்வரனால் மட்டும்தான் முடியும்.

கூட்டமைப்பின் தவறான அணுகு முறைகளும், அடிப்படையான விடயங்களில் பேரம்பேசாமல் விட்டுக்கொடுக்கத் தயாராகுவதும், மாற்றுத் தலைமை ஒன்றின் அவசியத்தை உணர்த்துகின்றது. அரசியல் இயக்கம் ஒன்றுக்குத் தலைமைதாங்க முன்வரும் ஒருவர் மக்களை வசீகரிக்கக்கூடிய தன்மையைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அந்த வசீகர சக்தி விக்கினேஸ்வரனிடம் தாராளமாகவே உள்ளது. இந்தப் பின்னணியில், தன்னுடைய அரசியலை மக்கள் மயப்படுத்துவதற்காக தமிழ் மக்கள் பேரவையை அமைத்த விக்கினேஸ்வரன், இப்போது “தமிழ் மக்கள் கூட்டணி” என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றையும் உருவாக்கியுள்ளார். அடுத்ததாக நடைபெறப்போகும் தேர்தல்களில் இது தனித்தோ கூட்டணி அமைத்தோ களம் இறங்கத் தயாராகின்றது.

### விக்கியின் அரசியல்

விக்னேஸ்வரன் அரசியலுக்குள் விரும்பிவந்த ஒருவரல்ல. உச்ச நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சமய, சமூகப் பணிகளுடன் பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை எழுதிக்கொண்டு ‘சிவனே’ என்றிருந்தவர்தான் அவர். வடமாகாண சபைக்கான தேர்தல் ஏற்பாடுகள் இடம்பெற்ற போது அரசியலில் சாராத அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு ஆளுமையை முதலமைச்சர் வேட்பாளராகக் களத்தில் இறக்க வேண்டும் என்று சம்பந்தன் சிந்தித்தார். இவ்வாறான ஆளுமை சர்வதேச சமூகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடிய ஒருவராகவும் சிறந்த மொழி ஆளுமையைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும் என்பதும் சமபந்தனின் விருப்பமாக இருந்தது.

அதன்மூலமாகவே தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாஷைகளை அரசியல் கலப்பின்றி சர்வதேச சமூகத்தின் முன்பாக எடுத்துச் செல்ல முடியும் என்பது சம்பந்தன் எதிர்பார்த்தார். அப்போது சம்பந்தனால் அடையாளங் காணப்பட்டவர் தான் விக்னேஸ்வரன். சம்பந்தனின் அரசியல் வாழ்க்கையில் அவர் செய்த மிகப்பெரிய பணிகளில் விக்னேஸ்வரனை அடையாளம் கண்டதும், தீவிரமான எதிர்ப்புக்களின் மத்தியிலும் தேர்தலில் களம் இறக்கியதும் ஒன்று எனச் சொல்ல முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக விக்கினேஸ்வரன் களம் இறங்க வேண்டும்

என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது விக்கினேஸ்வரன் முன்வைத்தது

தொடர்ச்சி 6ம் பக்கம்

# இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை யாருக்கு இலாபம்?

## செங்கோடகன்

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதத்திற்கு எதிரான போராக ஜே.ஆரினால் முன்மொழியப்பட்டு மகிந்தராஜபக்சவரை வழிமொழியப்பட்டு சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் மௌனிக்கச் செய்யப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடையவுள்ளது. ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு ஆதரவாக சர்வதேச சமூகத்தை அணிதிரட்டுவதில் தமிழ்த் தலைமைகள் தோல்வியடைந்துள்ளன அல்லது அதற்கான காத்திரமான முன்னெடுப்புகளை பற்றுறுதியுடன் மேற்கொள்ளவில்லை என்ற முடிவிற்கே கடந்தகால அனுபவங்களிலிருந்து வரமுடிகிறது.

மகிந்த அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில் சர்வதேச வல்லரசு நாடுகளுக்கு இலங்கையில் கால்பதிப்பதற்கு அளித்த உத்தரவாதத்தைக் காற்றில் பறக்கவிட்டதே அவரை பதவி—யிலிருந்து அகற்றுவதற்குக் காரணமாக அமைந்தது. ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் எப்பொழுதும் தமிழ் தேசிய இனத்தை அங்கீகரிக்கவோ அல்லது அவர்களை சமத்துவத்துடன் நடத்தவோ முன்வராது என்பதும் தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்குவதற்கும் அதன் மூலம் பாதுகாப்பு செலவினங்களை அதிகரித்து தமது குடும்பங்களின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள நாட்டின் இறைமையையே அடகு வைக்கும் என்பதும் இலங்கையின் வரலாறு.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தராஜபக்சவை வீழ்த்துவதற்காகசிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் சர்வதேச சமூகம் பொதுவேட்பாளராக களமிறக்கியது. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாதத்தைப் பங்குபோட முனைந்த சரத்பொன்சேகாவைத் தோற்கடிக்க முடிந்த மகிந்தராஜபக்சவிற்கு மைத்திரியைத் தோற்கடிக்க முடியாமல் போனதற்கு சர்வதேச சமூகம்தான் காரணம் என்பது இலங்கையின் ஆளும் வர்க்கங்களே ஏற்றுக்கொண்ட விடயம்.

கட்சியே இல்லாத ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சம்பவம் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அரங்கேறியது. தனது சொந்தக் கட்சி தனக்கு எதிராகச் செயற்பட, சர்வாதிகாரத்திற்கு எதிராக அணிதிரண்ட சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட்டதும் சர்வதேச சமூகத்திற்கு வாய்ப்பாக மாறியது. தமிழ்த் தேசிய இனத்தின் விடிவை சர்வதேச சமூகத்திடம் கையளித்திருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தின் கைப்பாவையாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. இந்த நிர்ப்பந்தத்தை சர்வதேச சமூகம் சரியாகக் கையாண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் மைத்திரிக்கு ஆதரவளிக்க அழுத்தம்கொடுத்தது. சீனசார்பு நிலைகொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அதன் பொதுச் செயலாளரையே பொது வேட்பாளராகக் களமிறக்கி, அவரை சுதந்திரக் கட்சியிலிருந்து



பிரித்தெடுத்து, கட்சியை அவருக்கு எதிராகச் செயற்படவைத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் மகிந்தவையும் தோற்கடிக்கச் செய்வதில் மேற்குலக மற்றும் அமெரிக்க நாடுகள் வெற்றிபெற்றன. இதன் மூலம் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைத்து தாங்களும் கால்பதிக்கலாம் என்று அவை கணக்குப்போட்டன. ஆட்சி மாற்றம் இதற்கு ஓரளவு சாதகத்தன்மையையும் ஏற்படுத்தியிருந்தது.

புதிய ஜனாதிபதி மைத்திரிக்கு தன்னை ஒரு தூய்மையானவர் என்பதையும் நாட்டையும் ஜனநாயகத்தையும் நேசிப்பவர் என்பதையும் நிரூபிக்க வேண்டிய தேவை அதிகரித்தது. அதற்காக 19ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களில்



பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் குறைக்கக்கூடியவற்றை குறைப்பதற்கு முன்வந்து தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார். கட்சியிலும் செல்வாக்கில்லாமல், ஆட்சியதிகாரத்தையும் கணிசமாக விட்டுக்கொடுத்தபின் ஆட்சியில் தனக்கு எந்தவிதப் பிடிமானமும் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட மைத்திரி தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ள முயற்சித்தார். தருணம் பார்த்துக் காத்திருந்த மகிந்த, மைத்திரிக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க, வேறுவழியின்றி தனது பழைய எஜமானனுக்கு விசுவாசியாக மாறவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார். எந்த வழியில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் சூட்டோடு சூடாக 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரணிலை பிரமராக்கினாரோ அதே வழியில் 2018 ஒக்டோபர் மாதம் மகிந்தவை பிரதமராக்கினார். இரண்டுமே ஜனநாயக விரோத நடவடிக்கைகளே. நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பதாகக் கூறுபவர்கள் முன்னைய விடயத்தைக் கவனத்தில் கொள்ளாதது ஏன்?

2015ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட மைத்திரி—ரணில் கூட்டரசாங்கத்தின் முதலாவது வரவு—செலவுத் திட்டத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்த்திருந்தது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்திருந்த பத்தியெழுத்தாளர் ஒருவர் பெரும்பான்மையினரின் முடிவுகள் எல்லாமே சரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சிறுபான்மையினரின் கருத்துக்கள் தவறானவையாகவே இருக்க வேண்டிய அவசியமுமில்லை என்றும் எழுதியிருந்தார். மேலும் எதிரெதிராக உள்ள இரண்டு துருவத்தினரும் சேர்ந்து ஆட்சி அமைத்துள்ள போதிலும் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார். அவருடைய கருத்துக்கள் சரியானவை என்பது இன்று நிரூபணம் ஆகியிருக்கிறது.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட 30ஃ1 தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசாங்கம் அதனை நிறைவேற்றுவதற்கு இரண்டுவருட கால அவகாசத்தையும் பெற்றுக்கொண்டது. இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றம், மனித உரிமை மீறல்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நிபுணர்களின் உதவியுடன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தின் ஆரம்ப வரைபு சற்று கடுமையாகவும் தமிழ் மக்களுக்கு விரைவாக நீதி வழங்கக்கூடியதாக

தொடர்ச்சி 5ம் பக்கம்

# மாவீரர் தின நிகழ்வை தடுப்பது உலக நாகரிகத்திற்கு முரணானது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடல்



தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாகப் பிரகடனம் செய்துள்ள அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீதான தடையை இன்னமும் நீக்காமல் இருப்பது தென்னிலங்கையில் அரசியல் பிழைப்பு நடத்து வதற்கான குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதேயன்றி வேறில்லையென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச் சந்திரன் தெரிவித் துள்ளார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இன்று திங்கட் கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறியுள்ளதாவது, "உரிமைகளைப் பாதுகாக்கவும் அடக்குமுறைகள் ஆக்கிரமிப்பு களிலிருந்து விடுபடவும் உல கெங்கும் ஆயுதப் போராட்டங்கள் உட்பட பல்வேறு வகையான போராட்டங்கள் நடை பெற்றுள்ளன. இவ்வாறு பல்வேறு நாடுகளும் தமது நாட்டை முழுமையாகவோ பகுதியாகவோ ஆக்கிரமிக்க முனைந்த எதிரி நாடுகளுடன் யுத்தங்களில் ஈடுபட்டு தமது நாட்டினைப் பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்தவர்களை மாவீரர்களாக போற்றி நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு மக்களால் நினைவுகூரப்பட்டும் மரியாதை செலுத்தப்பட்டும் வருகின்றமை உலக வழக்கமாகும். அந்தவகையில் காலனித்துவத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திய சுபாஷ் சந்திரபோஸ், வாஞ்சிநாதன், பகத்சிங், சுகதேவ் மற்றும் அகிம்சை வழியில் போராடிய வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணியம் சிவா போன்றவர்கள் கூட காலனித்துவவாதிகளால் பயங்கர வாதிகளாக சித்திரிக்கப் பட்டார்கள். ஆனால், இந்திய மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைவரும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களே ஆவர். மேலும் இலங்கையில் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் பாரிய அளவில் நடைபெறாத போதிலும் காலனித் துவத்திற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் கூட காலனித்துவ ஆட்சியாளர்களால் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டனர். மேலும், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அரசு, அவர்களை காலனித்துவத்திற்கு எதிராகப் போராடிய கதாநாயகர்களாக பிரகடனம் செய்துள்ளது. எந்தவொரு நாட்டிலும் தேசிய இன விடுதலைக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த போராளிகளையும் மக்களையும் நினைவுகூர்வதும் மரியாதை செலுத்துவதும் உலக வழக்கம் மட்டுமல்ல அந்தந்த மக்களின் உரிமையும் கடமையும் ஆகும். இதனை மறுதலித்து மாவீரர்தினம் கொண்டாடக்கூடாதென இலங்கை அரசாங்கம் அறிவித்திருப்பதானது உலக நாகரிகத்திற்கு முரணானதும் அடிப்படை மனித உரிமை மீறல்களும் ஆகும். தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாகப் பிரகடனம் செய்துள்ள அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீதான தடையை இன்னமும் நீக்காமல் இருப்பது தென்னிலங்கையில் அரசியல் பிழைப்பு நடத்துவதற்கான குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதேயன்றி வேறில்லை. அத்தகைய தடைச்சட்டம் இருப்பதனாலேயே நீதிமன்றம் மாவீரர்தின நிகழ்வுகளை நடாத்துவதற்கு வரையறைகளை விதிப்பதாகத் தோன்றுகின்றது. இவ்வாறு அரசியலில் ஈடுபடும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளினதும் அரசினதும் போக்குகள் நிறுத்தப்பட வேண்டும். அந்தவகையில் தமிழ்த் தேசிய இனம் ஒன்றுபட்டு போராடுவதே மாவீரர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி" என சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.




வேகத்தின் வீரமும் கார்த்திகையில்
வியாபக தாகமும் கார்த்திகையில்
காந்தளின் கவர்ச்சியும்
கார்த்திகையில்
கல்லறை விழிப்பதும் கார்த்திகையில்

தீபங்கள் எரிவதும் கார்த்திகையில்
யாகங்கள் புரிவதும் கார்த்திகையில்
சோகங்கள் சொல்வதும்
கார்த்திகையில்
தாகங்கள் தீர்வதும் கார்த்திகையில்

மழை முட்டி வழிவதும்
கார்த்திகையில்
விழி முட்டி நிறைவதும்
கார்த்திகையில்
தமிழினம் உயிர் பெறும்
கார்த்திகையில்
தலைக்குரல் கேட்பதும்
கார்த்திகையில்

சபதங்கள் ஆயிரம் கார்த்திகையில்
சன்னதம் ஆடுதல் கார்த்திகையில்
சாந்தமும் கோபமும் கார்த்திகையில்
சந்தம் இசைப்பதும் கார்த்திகையில்
வீரத்தை நினைப்பது கார்த்திகையில்
வேகத்தை தொழுவது
கார்த்திகையில்
மனம் வெம்பி அழுவதும்
கார்த்திகையில்
புனிதம் பெறுவதும் கார்த்திகையில்

காதினை வையுங்கள் கல்லறையில்
குரலதை கேளுங்கள் கல்லறையில்
உன் உடன் பிறந்தவர் கல்லறையில்
அவர் குரல் கேட்டிடும்
கார்த்திகையில்

கைகளை வையுங்கள் கல்லறையில்
சத்தியம் செய்யுங்கள் கல்லறையில்
கரமது உயரும் கல்லறையில்
கனவுகள் முடியும் கார்த்திகையில்

5ம் பக்க தொடர்ச்சி

*இருந்ததாகவும் கருத்துக்கள் உள்ளன. இந்தத் தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்வதில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்குப் பாரிய பொறுப்பு இருந்ததாகவும் பேசப்பட்டது.*

*அவரும் 'நிறைவேற்றப்படுகின்ற தீர்மானம் நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும். வெறுமனே தீர்மானத்தை நிறைவேற்றி அது நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போடுவதால் யாருக்கு என்ன இலாபம்? என்றும் இலங்கை அரசாங்கம் 99வீதம் நிறைவேற்றாது என்பது எங்களுக்கும் தெரியும் ஒரு வீத நம்பிக்கையை எப்படி நூறுவீதமாக மாற்றுவது என்று நாம் பார்க்க வேண்டும். இது நான் முயற்சி எடுத்து கொண்டுவந்தது. இதன் சாதக பாதகங்களுக்கு நான் பொறுப் பேற்கிறேன்' என்று கூறியிருந்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது. இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் 2017ஆம் ஆண்டு அதே தீர்மானத்தை எவ்விதமாற்றமுமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டாண்டுகள் கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அந்த இரண்டாண்டு கால அவகாசம் எதிர்வரும் 2019மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையிலேயே நாட்டில் தற்போது ஜனாதிபதி மைத்திரியால் மகிந்த மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*2015 மற்றும் 2018 ஆட்சி மாற்றங்கள் முன்னாள் ஜனாதிபதியைக் காப்பாற்றுவதற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மறைப்பதற்காகவே ஜனநாயக மீட்பு வாதம் முன்வைக்கப்படுகிறது. யாரை எதிரியாகவும் பூச்சாண்டியாகவும் காட்டினார்களோ அவரையே மீண்டும் ஆட்சியில் அமர வைத்துள்ளார்கள். நாட்டில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மகிந்தவை மீண்டும் ஆட்சியில் அமர வைத்துவிடும் என்று கூச்சலிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இப்பொழுது தடைகளை மீறி மாவீரர் தினத்தை எமது மக்கள் அனுட்டிப்பார்கள் என்று அறிக்கை விடுகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தவுடன் கைகோர்த்தாலே ஓரளவிற்காவது நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் நாமல்ராஜபக்ச கூறுகிறார். அப்படி என்றால் தமிழ் மக்களை சிங்கள அரசியல் சமூகம் பணயக்கைதிகளாக வைத்திருக்கவே விரும்புகிறது என்பதுதான் மகிந்த தரப்பின் நிலைப்பாடா? மறுபுறத்தில் ரணிலும் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது என்பதை ஊடகத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார். எந்த சர்வதேச சமூகம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டதோ அதே சர்வதேச சமூகத்திடம் தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய நிலைக்கு நீங்களும் பொறுப்பாளிகள் என்ற உண்மையை அழுத்திச் சொல்லி எங்களிடம் உத்தரவாதம் வாங்கிக்கொண்டு உங்களது வேலைகளை முடித்துக்கொண்டதைப் போலவே, எங்களது பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் தார்மீகக் கடமை உங்களுக்கு உள்ளது என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்த்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தவறிவிட்டார். பதினான்கு நாடுகளின் ராஜ தந்திரிகளை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவரான கூட்டமைப்பின் தலைவர் திரு.சம்பந்தன் இந்த விடயத்தை மிகவும் காத்திரமான வழியில் உணர்த்தியிருக்க வேண்டும். ஆனால் சம்பந்தன் அவர்கள் ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும் என்பதுடன் தனது கோரிக்கையை மட்டுப்படுத்தியுள்ளார். தனது கட்சிக்குள்ளும், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையிலும் ஜனநாயகத்தை மீறிச் செயற்படும் தலைவர் நாட்டின் ஜனநாயகம் குறித்து கவலைப்படுவது வேடிக்கையானது. இலங்கையில் மாறிமாறி ஆட்சி செய்தவர்கள் தாங்கள் பதவியேற்றவுடன் முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே அவர்களை அரசியல் அனாதைகளாக்குவதை நோக்கமாகக் கொண்டு ஜனநாயகத்தை மீறிச் செயற்படுவது தொடர்கதை. ஏதோ இப்பொழுதுதான் முதன்முறையாக ஜனநாயக மீறல் நடைபெற்றுள்ளதைப் போலவும் தாங்கள்தான் உண்மையான ஜனநாயகக் காவலர்கள் போலவும் கூட்டமைப்பின் தலைவர் சொல்வதை ஏற்க முடியவில்லை.*

*இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை உள்ளது. காரியங்கள் நடைபெறுகின்றன. வேகம் போதாது என்று நற்சான்றிதழ் வழங்கிய கூட்டமைப்பின் தலைவர் இப்பொழுது கூக்குரல் இடுவது ஏன்?*

*கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஈபிஆர்எல்எவ்வின் சார்பில் கலந்துகொண்டு சிவசக்தி ஆனந்தன் பேசுகையில், 'மகிந்த மகிந்த என்று பூச்சாண்டி காட்டுகிறீர்கள். யார் மகிந்தவை நடுவீட்டில் உட்கார வைத்து அழகு பார்ப்பது? இன்றைய ஜனாதிபதிதான். நீங்களும் மகிந்தவை சென்று சந்தித்துள்ளீர்கள் யாரைக் கேட்டு சந்தித்தீர்கள்? என்ன பேசினீர்கள்? அங்கத்துவக் கட்சிகளான எங்களுக்கு இதைப்பற்றி நீங்கள் ஏன் சொல்லவில்லை? என்று பல கேள்விகளை எழுப்பியிருந்தார். இதற்கெல்லாம் மௌனம் காத்த தலைவர் இன்று தேர்தல் நெருங்க நெருங்க வீரவசனம் பேசுகிறார். ஜனநாயக காவலனாக நாடகம் ஆடுகிறார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் பேசுவதை விடுத்து பழைய பாணியிலேயே வாய்ச்சொல்வீரம் காட்டுகிறார்.*

*தமிழ்த் தேசிய இனத்தை இலங்கையின் சகல உரிமைகளுடன் வாழ உரித்துடைய மக்கள் கூட்டம் என்ற உண்மையை சிங்கள— பௌத்த மேலாதிக்க சக்திகள் உணரும்வரை இந்த நாட்டில் அமைதியும் ஜனநாயகமும் தழைக்க முடியாது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.*

●

3ம் பக்க தொடர்ச்சி

ஒரேயொரு நிபந்தனைதான். அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள 4 கட்சிகளும் ஒன்றாக இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதுதான் அவரது நிபந்தனை. அதன்படி மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய நால்வரும் ஒன்றாகச் சென்று இந்தக் கோரிக்கையை முன்வைத்த போது அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

தடம் மாறும் தமிழ்த் தலைமை

விக்னேஸ்வரன் அரசியல் அனுபவம் இல்லாதவர். அதனால் அவரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து செயற்படுத்த முடியும் என சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் கருதினார்கள். ஆனால், அனைத்து விடயங்களிலும் அவ்வாறு செயற்பட விக்கி தயாராகவிருக்கவில்லை. குறிப்பாக தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புக்களுக்கும் விக்கி தயாராகவிருக்கவில்லை. குறிப்பாக வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைத் தீர்மானம், போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்ற தீர்மானம் போன்றன கூட்டமைப்பின் தலைமைக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. சம்பந்தன் இவ்விடயத்தில் மௌனமாக இருக்க சுமந்திரன் முதலமைச்சரை நேரடியாக விமர்சிக்க முற்பட்டார். அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் வகையில் செயற்படுவதை சம்பந்தனும் சுமந்திரனும் விரும்பவில்லை. கடந்த பொதுத் தேர்தலில் (2015 ஆகஸ்ட்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக விக்கி களம் இறங்க மறுத்துவிட்டார். விக்கிக்கும் ரணிலுக்கும் இடையில் அறிக்கைப் போர் ஒன்று இடம்பெற்ற போது சுமந்திரன் ரணிலின் பக்கத்திலேயே நின்றார். இதன்போது விக்கிக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நேரடியாக வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றதாகவும் சொல்லப்படுகின்றது. அதன்போது சீற்றமடைந்த சுமந்திரன், “நான் ஒரு சட்டத் தரணி. எனக்கு சட்டம் தெரியும்“ எனக் கடும் தொனியில் சொல்லியிருக்கின்றார். இதற்குப் பதிலடி கொடுத்த முதலமைச்சர், “நான் நீதியசரர்” எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வளவுக்கும் சுமந்திரன் சட்டக் கல்லூரியில் விக்கியின் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

2015 இல் “நல்லாட்சி” அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கூட்டமைப்புத் தலைமையின் போக்கு தமிழர் நலன் என்பதை முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக அரசாங்கத்தின் நலன்களை முன்னிலைப்படுத்துவதாகவே இருந்தது. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. ஜெனீவாவில் அரசுக்கு சங்கடங்கொடுக்கக் கூடாது என சம்பந்தனும் சுமந்திரனும் கருதுகின்றார்கள். வரவு செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவருமே கடுமையாக விமர்சித்தார்கள். இறுதியில் ஆதரித்து வாக்களித்தார்கள். பின்னர் தமிழர்களின் அடிப்படை உரிமைகளையே ஏற்றுக்கொள்ளாத புதிய அரசியலமைப்புக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு தயாராகியது. சம்பந்தன் வெளியே என்னதான வீராவேச உரைகளை நிகழ்த்தினாலும், சமஷ்டியும் இல்லாத இணைப்பும் இல்லாத அரசியலமைப்புக்கு ஆதரவளிக்கத் தயாராகியிருந்தார்கள்.

மாற்றுத் தலைமை உருவாகுமா?

கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சி மட்டும்தான் இந்த நிலைப்பாட்டில் உள்ளது. கூட்டமைப்பைப் பதிவு செய்யும் விவகாரத்திலும் முரண்பாடுகள் தொடர்கின்றது. பதிவைத் தவிர்ப்பதன் மூலம் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கத்தைப் பேணுவதும், ஏனைய கட்சிகளைச் சிதைத்து அதிலுள்ளவர்களை தமது பக்கத்துக்கு எடுத்துக்கொள்வதும் சம்பந்தன் — சுமந்திரனின் உபாயமாக இருந்தது. அந்த நிலையில்தான் ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டமைப்பிலிருந்து வெளியே வந்தது. ஆனால், முரண்பாடுகள் இருந்தாலும் புளொட், ரெலோ ஆகியன அதிலிருந்து உடனடியாக வெளியே வருவதற்குத் தயங்குகின்றன. ஆக, விக்கினேஸ்வரன் உருவாக்கிய தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எப்., கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அனந்தி சசிதரனின் கட்சி என்பனதான் கூட்டமைப்புக்கு மாற்றான அணி ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுக்களில் இப்போது ஈடுபட்டுள்ளன. தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் சிலரும் இதனுடன் இணையக்கூடும். இதற்குள் சில முரண்பாடுகள் இருந்தாலும் கூட, விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த அணியைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் தாயகத்திலும், புலத்திலும் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில் மாற்றுத் தலைமை என்பது ஒருபோதும் வெற்றிபெறாத ஒன்றாகத்தான் இருக்கின்றது. உதாரணமாக கஜேந்திரகுமார் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ள போதிலும் தேர்தல் என்று வந்தால் பிரதான அணியை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்றே தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். கூட்டமைப்பிலிருந்து விலகிய பின்னர் ஒரு ஆசனத்தைக் கூட அவரால் பெற முடியாமல் போனது இதனால்தான். வசீகரம் மிக்க சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்படக் கூடிய ஒருவர் இவ்வாறான மாற்றுத் தலைமையைப் பொறுப்பேற்றால் மட்டுமே கூட்டமைப்பின் தலைமைக்கு சவால் விட முடியும். அவ்வாறான தலைமையாக இன்று இனங்காணப்படுபவர் விக்னேஸ்வரன் மட்டும்தான். அவர் தலைமையில் உருவாகியிருக்கும் தமிழ் மக்கள் பேரவை குறுகிய காலத்தில் பெற்றிருக்கும் மக்கள் செல்வாக்கு இதற்கு உதாரணம். வடக்கில் விக்கிக்கு பெரும் ஆதரவு அலை இன்றுள்ளது. மக்கள் அவர் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அந்த ஆதரவு அலையுடன் நான்கு கட்சிகள் உட்பட மக்கள் அமைப்புக்களும் இணையும்போது புதிய தலைமை ஒன்றை உருவாக்க முடியும். கூட்டமைப்பின் தலைமை தடம் மாறும் நிலையில் மாற்றுத் தலைமை ஒன்றின் அவசியம் இன்று தெளிவாக உணரப்படுகின்றது. இந்த நிலையில் நம்பிக்கை நட்டத்திரமாக இருப்பவர் விக்கினேஸ்வரன் மட்டும்தான். தமிழர் பிரச்சினையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல நேர்மையும், மனஉறுதியும், திடசங்கற்பமும், கொள்கைப் பிடிப்பும் ஒருவரே அவசியம். அந்த வகையில்தான் விக்கினேஸ்வரன் உருவாக்கியுள்ள “தமிழ் மக்கள் கூட்டணி” நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய ஒன்றாக உருவாகியுள்ளது. ஆனால், அதன் முன்பாகவும் பல சவால்கள் உள்ளன. அந்தத் தடைகளையும் தாண்டி கூட்டணி பயணிக்குமா?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் வி.சஞ்சுதன் ஏற்பாட்டில் “மரம் வளர்ப்போம் தேசம் காப்போம்“ என்னும் தொனிப்பொருளில் மரம் நடும்விழா சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பொதுமக்கள்,வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்

## உயிர் நீத்த விடுதலை வீரர்களை நினைவு கூருவது எமது கடமை!

**சீ.வி.விக்னேஸ்வரன் அறிக்கை**

தமிழ் மக்களின் உரிமைக்களுக்காக உயிர் நீத்த எமது விடுதலை வீரர்களை நினைவு கூரும் எமது மக்களின் உணர்வினை எந்த எதிர்ப்பினாலும் தகர்த்து விட முடியாது, உயிர் நீத்த விடுதலை வீரர்களை நினைவு கூருவது எமது கடமை என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாவீரர் தினம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர் நீத்த விடுதலை வீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகளை புராதன கிரேக்கர் காலம் முதல் இன்று உலகில் இடம்பெறும் யுத்த காலங்களின் போதும் அதன் பின்னரும் காண முடியும். விடுதலை வீரர்களை நினைவு கூருவது அவரவர் சார்ந்த சமூகங்களின் கடமை. இன்றைய மனித நாகரிகத்தின் முக்கியமான ஒரு பண்பாக இது காணப்படுகிறது. முரண்பாடுகளுக்கான தீர்வு கோட்பாடுகளிலும் யுத்தங்களில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் நினைவுகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தமது விடுதலை வீரர்களை நினைவுகூரும் உரிமைக்கு எதிராகத் தெற்கில் கடும் எதிர்ப்பு வெளியிடப்படும் துர்பாக்கிய நிலைமை இன்று காணப்படுகிறது. யுத்தத்தில் உயிர்நீத்த தமது பிள்ளைகளை தாய் தந்தையர் நினைவுகூர்ந்து அழுவதையோ, தமது உடன்பிறப்புக்களை சகோதரங்கள் நினைவு கூர்ந்து தேற்றிக்கொள்வதையோகூட சகித்துக்கொள்ள முடியாத தெற்கின் இழி மனோநிலையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் உரிமைக்களுக்காக உயிர் நீத்த எமது விடுதலை வீரர்களை நினைவுகூரும் எமது மக்களின் உணர்வினை எந்த எதிர்ப்பினாலும் தகர்த்து விட முடியாது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அவ்வாறு எதிர்ப்பவர்கள் எம் மக்கள் மனதில் மேலும் மேலும் உறுதியையும் சுதந்திர தாகத்தினையும் மேலெழுச் செய்கின்றார்கள். அமைதியான வழியில் உரிய வழிமுறைகளை பின்பற்றி எமது மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன். எமது மக்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த எமது துயில் கொள்ளும் உள்ளங்கள் எமது மக்களின் மனங்களில் எப்பொழுதுமே வாழ்ந்துகொண்டிருப்பர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# உலகெங்கும் மாவீரர் நாள் நினைவெழுச்சி!

தாயகம், தமிழகம், புலம் பெயர் நிலங்கள் எங்கும் மாவீரர் நாளை உணர்வு பூர்வமாக நினைவு கொள்ளும் ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. துயிலுமில்லங்கள், பொது வெளிகள், மண்டபங்கள், கோவில்கள், தத்தமது இல்லங்கள் என நினைவு கூரப்படுகின்ற களங்கள் வேறுபட்டு நின்றாலும் மாவீர்ர்களின் நினைவெழுச்சி மட்டும் எல்லோருக்கும் பொதுவானதாகவே நிமிர்ந்து நிற்கின்றது.

ஒவ்வொரு மாவீரர் நாள் ஏற்பாட்டுக் களங்களிலும் வெவ்வேறு வகையான நெருக்கடிகள், சவால்கள். எல்லா வகையான பின்புலங்களிலிருந்தும் எமது மக்களின் சுதந்திரமான அரசியல் வாழ்வுக்காக போராட்டத்தில் இணைந்து ஒன்றுபட்டு உழைத்து மானிட வாழ்வின் அதியுச்ச ஈகங்களை புரிந்து மாவீரர்களானவர்கள்



எங்கள் தேசப் புதல்வர்கள். மாவீரர் நாளென்பது நினைந்துருகிப் போகும் நிகழ்வு மட்டுமல்ல.

நினைவெழுச்சியோடு அவர்களது தடங்களில் தொடர்ந்தும் நடப்போமென ஆண்டு தோறும் எமது சத்தியத்தைப் புதுப்பித்துக் கொள்ளும் நாளும் கூட. எந்த வகையான கருத்து வேறுபாடுகளுக் கடந்தும் மாவீரர்களின் இலட்சியப் பயணத்தை நாம் தொடர வேண்டியதே காலத்தின் கட்டளையும் தேவையும்.

புனிதமானவர்களைப் பூசிப்பதற்கு எங்கள் எண்ணங்களும் புனிதமானவையாகவே இருத்தல் வேண்டும். தாயகம், தமிழகம், புலம் பெயர் நிலங்கள் அனைத்தும் மாவீரர்களது நினைவு நாட்களில் காட்டுகின்ற அதே அக்கறையையும் உணர்வையும் அவர்களது இலட்சியத்தை அடைவதிலும் காட்டுவோம். மாவீரர்கள் அதற்கான வல்லமையை எமக்குத் தரட்டும்.

## டென்மார்க் பல்கலைகழக மாணவர்களால் மாவீரர் வார நிகழ்வு!




தாயக விடுதலைப்போரில் தங்களுடைய இன்னுயிர்களை ஈந்து வித்தாகிப்போன மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் நிகழ்வு டென்மார்க் பல்கலைகழக தமிழ் மாணவர்களால் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக பொதுச்சுடர், ஏற்றலுடன் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியெற்றல், அதனையடுத்து ஈகச்சுடரேற்றல் நிகழ்வும் இடம்பெற்றது, அகவணக்கத்தைத் தொடர்ந்து துயிலுமில்லப்பாடல் ஒலித்தது. மண்டபத்தில் நிறைந்திருந்த அனைவரினதும் கைகளில் தீபங்கள் எரிந்து கொண்டிருக்க அப்பாடல் முழுவதும் உணர்வுமயமாக மாணவர்கள் ஒன்றித்திருந்தனர். அதைத் தொடர்ந்து மணவர்களால் மலர்வணக்கம் மிகவும் உணர்வுபூர்வமானதாக நடைபெற்றது. 'எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக அறிவு ஜீவிகளாக தேசப் பற்றானர்களாக போர்க் கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும்.

இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெறவேண்டும். என்ற எம் தேசியத் தலைவரின் எண்ணத்திற்கேற்ப, எம்முடன் சேர்ந்தியங்கும் பலதேசிய, பல்துறை சார்பு மாணவருக்கும் எமது போராட்த்தின் அறவிளக்கத்தை புரிந்துணர்வாக்கி, இலட்சிய நெருப்பை இதயத்தில் இருத்தி, தமிழ் மாணவர்கள் நாங்கள் நம் இருப்பை உறுதி செய்வோம், என்று இந்புனித நாளில் உறுதி ஏற்போம். தமிழ் மாணவர் ஒன்றியம்

## சுவிஸ் தூண் நகரசபை தேர்தலில் ஈழப்பெண் தர்ஷிகா வெற்றி



சுவிற்ஸர்லாந்தின் தூண் நகரசபை தேர்தலில் தர்ஷிகா கிருஸ்ணானந்தம் வடிவேலு என்ற ஈழப் பெண் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

அவர் 2916 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். சுவிஸ் தூண் நகரசபையில் முதன்முதலாக வெற்றியீட்டிய முதல் ஈழப்பெண் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரான்சில் இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு!

### கோவை ராமகிருட்டிணன் பங்கேற்பு


பிரான்சில் நடைபெறும் மாவீரர் நாளில் கலந்து கொள்வதற்காக தமிழின உணர்வாளர் கோவை ராமகிருட்டின்வருகை தந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருப்பெற்றபோது, எமது விடுதலைக்காக நீண்டதூரம் பயணித்தவரும் தமிழ் இனத்துக்காக பல பணிகளைச் செய்தவரும் தாயகத்தில் தேசிய தலைவரை பல தடவைகள் சந்தித்தவரும் இன்றுவரையும் ஈழத் தமிழர் உரிமைக்காக உழைத்தவரான மதிப்புக்குரிய கோவை ராமகிருட்டிணன் அவர்கள் பிரான்சில் நடைபெறும் மாவீரர் நாளில் பங்கேற்று சிறப்பிப்பதற்காக பிரான்சுக்கு வருகை தந்துள்ளார்.



பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் பிரான்சு மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு 25.11.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நந்தியார் பகுதியில் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. நிகழ்வில், பொதுச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட்டாளர் ஏற்றிவைக்க மாவீரர் திருஉருவப்படத்துக்கான ஈகைச்சுடரினை 27.11.1998 அன்று கோப்பாய் பகுதியில் வீரச்சாவடைந்த லெப். உயிரவன் அவர்களின் தாயார் ஏற்றிவைக்க திருஉருவப்படத்திற்கான மலர்மாலையை 1998 இல் நாகர் கோவில் பகுதியில் வீரச்சாவடைந்த லெப்.சின்னவன் அவர்களின் தாயார் அணிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து, மாவீரர் பெற்றோர், சகோதரர்கள், பொதுமக்கள் என அனைவரும் அணிவகுத்து சுடரேற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து அரங்கநிகழ்வுகள் ஆரம்பமாகின. அரங்க நிகழ்வுகளாக தமிழ்ச்சோலை மாணவர்களின் எழுச்சி நடனங்கள், மாவீரர் கலைத்திறன்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளின் பேச்சு, தனிநடிப்பு, பாட்டு, கவிதை என்பன இடம்பெற்றன. மதியபோசனத்தைத் தொடர்ந்து, மாவீரர் பெற்றோர் மற்றும் சகோதரர் மேடையில் நினைவுக் கேடயம் வழங்கி மதிப்பளிப்புச் செய்யப்பட்டனர். சிறப்புரையை பிரான்சு



தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பரப்புரைப் பொறுப்பாளர் ஆற்றியிருந்தார். அவர் தனது உரையில், இன்று மாவீரர்களின் தியாகத்தையும் மாவீரர் பெற்றோரின் கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டார்.தாய்த் தமிழகத்தில் இருந்து வருகைதந்திருந்த தமிழின உணர்வாளர் திரு.கோவை இராமகிருட்டிணன் அவர்களும் தேசியத் தலைவருக்கும் தனக்கும் இருந்த உறவு குறித்தும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார்.மாணவர்களின் மாவீரர் நினைவு சுமந்த கலைத்திறன் வெளிப்பாடுகளை அனைவரும் அமைதியாக இருந்து உணர்வுபூர்வமாக அனுபவித்ததைக் காணமுடிந்தது.

# நெகிழி : உருவான வரலாறும் எதிர்கால அச்சுறுத்தலும்

வாழ்வில் இரண்டற கலந்துவிட்ட ஒன்று பிளாஸ்டிக் (நெகிழி) என்றால் மிகையில்லை. மனிதனால் தயாரிக்கப்பட்டு புவியினால் எக்காலத்திலும் சிதைத்து அழிக்க முடியாத பொருட்களில் ஒன்று பிளாஸ்டிக். அது எப்படி உருவானது என்பதைத்தான் இன்றைய பதிவுனூடாக நாம் தெரிந்துகொள்ளப்போகிறோம்..!

பதினெட்டாம் நூற்றாண்டில் கால்நடைகளின் (குறிப்பாக மாடுகளின்) கொம்புகளை பற்றி துவங்கிய ஆய்வுகள்தான் பிற்காலத்தில் பிளாஸ்டிக் உருவாக மூலகாரணமாக அமைந்தது என்றால் மிகையில்லை. பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் கால்நடைகளின் கொம்புகள், பால்புரதங்களால் தான் உருவாக்கப்படுகிறது என்பதை பதினெட்டாம் நூற்றாண்டு வாக்கில் மனிதன் தெரிந்துகொண்டான். கால்நடைகளின் கொம்புகள் பிளாஸ்டிக்கின் தோற்றத்தை ஒத்துக் காணப்பட்டாலும் கூட அவற்றின் கொம்புகள் மக்கும் திறன் கொண்டவை! இதைத்தொடர்ந்து இயற்கையாக ரப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் ரப்பர் பாலிருந்து பிளாஸ்டிக் தயாரிக்கும் முயற்ச்சியில் பல்வேறு நாடுகளை சேர்ந்த வேதியல் வல்லுனர்கள் தீவிர முயற்ச்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில் 1839—ஆம் ஆண்டு சார்லஸ் குட்இயர் என்ற அமெரிக்க கண்டுபிடிப்பாளர் ரப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் பாலுடன் கந்தகம் கலந்து சூடாக்கி வல்கனைசிங் ரப்பர் என்ற ஒருவகை ரப்பரை தயாரிக்கும் முறையை கண்டறிந்தார். இந்த கண்டுபிடிப்புதான் செயற்கை பிளாஸ்டிக் உருவாக்கத்திற்க்கு ஒரு ஊன்றுகோலாக அமைந்தது என்று சொல்லலாம். 1926—ஆம் ஆண்டு பாலிவினைல் குளோரைடு வகை பிளாஸ்டிக் தயாரிக்கும் முறையை வால்ட்டர் செமொன் என்பவர் கண்டறிந்தார். இதன் பிறகுதான் குழாய்கள் தயாரிப்பிலும் பிளாஸ்டிக் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1937—ஆம் ஆண்டு பாலியூரித்தீன் வகை பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ஓட்டோ பாயர் என்ற ஜெர்மனியை சேர்ந்த வேதியல் வல்லுனர் கண்டறிந்தார், இதன் பிறகு பாலிஸ்ட்ரீன் வகை பிளாஸ்டிக் புழக்கத்தில் வர ஆரம்பித்தது. இன்று பெருமளவில் புழக்கத்தில் உள்ள பாலிஎத்திலின் டெரெப்தலைட் வகை பிளாஸ்டிக்கை இங்கிலாந்தை சேர்ந்த வேதியல் வல்லுனர்களான ஜான் ரெக்ஸ் வின்பில்டு மற்றும் ஜேம்ஸ் டெனன்ட் டிக்சன் ஆகிய இருவரும் இணைந்து 1941—



ஆம் ஆண்டு தயாரித்தனர். அதுவரையில் மனித சமுதாயத்திற்கு எந்தவித தீங்கையும் ஏற்படுத்தாமல் சென்றுகொண்டிருந்த பிளாஸ்டிக்கின் பயணம் தடம் புரண்டு அழிவுப் பாதையை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. உணவுப்பொருட்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொருட்கள் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது PET பிளாஸ்டிக் கண்டறிந்த பின்புதான்..!

பிளாஸ்டிக் என்ற சொல் கிரீஸ் நாட்டின் கிரேக்க மொழியில் இருந்து பிறந்து கொஞ்சம் கொஞ்சமாக உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. பிளாஸ்டிக் என்ற சொல்லுக்கு கிரேக்கத்தில் ‘எளிதில் வடிவமைத்துக்கொள்ள இயலும்’ என்று பொருளாம். இன்று உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்கள் உள்பட நாம் அன்றாடம் பயன்படுத்தும் செருப்பு முதற்கொண்டு அனைத்தும் பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்டு உலக சந்தையில் விற்க்கப்படுக்கொண்டிருக்கிறது, ஏனைய உலோகங்களை காட்டிலும் இதன் மலிவான விலை, எளிதில் கையாளும் திறன், நீடித்து உழைக்கும் தன்மை ஆகிய காரணங்களால் பிளாஸ்டிக் மிகக் குறுகிய காலத்திற்குள் இமாலைய வளர்ச்சியை எட்டிப்பிடித்தது. இன்று உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் பிளாஸ்டிக் பொருட்களை காணாமல் திரும்ப இயலாது. கடல் முழுதும் மிதக்கும் பிளாஸ்டிக் பொருட்களை ஒன்றாகக் கூட்டினால் அது ஒரு மிகப்பெரிய தீவு அளவிற்கு இருக்கும் என்கிறது ஒரு புள்ளிவிவரம்.

மறுசுழற்சி செய்தல் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளில் பிளாஸ்டிக் பொருட்களை குறைக்கும் பணி உலகம் முழுக்கத் தீவிரமாக நடைபெற்றால் மட்டுமே இந்த உலகை நாம் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல இயலும் என்பது உறுதி.

# பாதுகாக்கப்பட வேண்டிய மூத்த தொல்குடிகள் அந்தமான் பழங்குடிகள்

அந்தமானின் சென்டினல் பழங்குடி மக்களால் அமெரிக்க மதபோதகர் கொல்லப்பட்ட சம்பவம் சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சென்டினல் மக்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் இணையத்தை அலசியதில் அந்தமான் பழங்குடிகளுக்கு நாம் இழைத்த துரோகங்கள் பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. இந்திய அரசும் அதன் பிரஜைகளும் ஜாரவா என்னும் பழங்குடியின மக்களுக்கு இழைத்துக்கொண்டிருக்கும் துரோகம் இன்றளவும் நீடிக்கிறது. பழங்குடிகளின் அழகான வாழ்வியல், நவநாகரீக மனிதர்களால் சிதைக்கப்பட்டிருக்கிறது.

`ஜாரவா பழங்குடி’... என்று கூகுளில் டைப் செய்தால் சுற்றுலாப் பயணிகள் சிலர் பகிர்ந்த வீடியோக்கள்தான் முதலில் வருகின்றன. அந்தமான் தீவுகளுக்கு சுற்றுலா செல்லும் நவநாகரிக மனிதர்கள், உலகின் மூத்த தொல்குடியினத்தை எப்படியெல்லாம் நடத்துகிறார்கள் என்பதைக் காட்டுகிறது அந்த வீடியோக்கள். வனவிலங்கு காப்பகத்தில் விலங்களுக்கு உணவுப் பொருள்களைத் தூக்கி வீசுவார்கள் அல்லவா? அதுபோன்று சுற்றுலாப் பேருந்தில் செல்லும் சிலர், நம் பொக்கிஷங்களாகக் கருத வேண்டிய பழங்குடியின மக்களுக்கு வாழைப் பழங்களையும் ப்ரட்டு துண்டுகளையும் வீசுகின்றனர். இன்னும் சிலர் அவர்களை நடனம் ஆட வைத்துள்ளனர். அந்தக் காட்சிகளை வீடியோவாக எடுத்து எதையோ சாதித்தது போன்று சமூக வலைதளங்களில் பகிர்ந்து புலகாங்கிதம் அடைந்துள்ளனர் அந்த நவநாகரிக மனிதர்கள். அந்தமான் நிக்கோபார் தீவுகளில் ஜாரவா, கிரேட் அந்தமானீஸ், ஔங்கே, சென்டினல் ஆகிய நான்கு இனக்குழுக்கள் வசித்து வருகின்றன. பழங்குடியின மக்களான இவர்கள், இந்தப் பிரபஞ்சத்தின் மூத்த குடியினமாகக் கருதப்படுகிறார்கள். சுமார்



55,000 ஆண்டுகளாக இந்திய பெருங்கடல் இவர்களை அரணாகப் பாதுகாத்து வருகிறது என்றே சொல்ல வேண்டும். அந்தமான் பழங்குடிகளின் வாழ்வியல் அழகானது. இவர்கள் பன்றிகளை வேட்டையாடி உணவாக உட்கொள்வார்கள். மீன்களும் இவர்களுக்குப் பிடித்த உணவு. பழங்கள், வேர்கள், தேன் உள்ளிட்டவற்றையும் சேகரித்து உட்கொள்வார்கள். வெளி உலகத்துடன் தொடர்பற்ற இவர்களைப் `பாதுகாக்க வேண்டிய’ மக்களாக இந்திய அரசு அறிவித்தது. அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் செல்லவும் தடை விதிக்கப்பட்டது. 1956—ம் ஆண்டு தொல் பழங்குடியினர் பாதுகாப்புச் சட்டம் (Protection of aboriginal tribes regulation) இயற்றப்பட்டது. அதன்படி பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிக்குள் வெளியுலக மனிதர்கள் செல்லக் கூடாது. இந்திய அரசு கொடுத்த பாதுகாப்பு உண்மையில் அவர்களைப் பாதுகாக்கவில்லை. ஆம், அந்தமான் பழங்குடி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது. முக்கியமாக ஜாரவா பழங்குடியின மக்கள் அழிவின் விளிம்பில் உள்ளனர். 1970—ம் ஆண்டு திறக்கப்பட்ட அந்தமான் நெடுஞ்சாலையே இந்த அழிவுக்குக் காரணம். வடக்கு மற்றும் மத்திய அந்தமான் பகுதிகளை இணைப்பதற்காகக் காட்டு பகுதிகளின் ஊடே இந்த அந்தமான் ட்ரன்க் சாலை அமைக்கப்பட்டது. ஜாரவா மக்களின் வசிப்பிடத்துக்கு மிக அருகே சாலை சென்றது. பொதுவாகப் பழங்குடி மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைவாகத்தான் இருக்கும். எனவே, சாலை கட்டமைப்புப் பணிகளின்போது பணியாளர்களிடமிருந்து ஜாரவா மக்களுக்கு நோய்த்தொற்று பரவியது. சாலை போடும்போதே ஜாரவா மக்கள் பலர் நோய்த்தொற்றால் பலியானார்கள்.

சாலை செயல்பாட்டுக்கு வந்த பின்பு வேறு சில பிரச்னைகளும் ஜாரவா மக்களின் உயிருக்கு உலை வைத்தன. வேட்டைக்காரர்கள், கடத்தல்காரர்கள் ஜாரவா மக்களைத் தொந்தரவு செய்யத் தொடங்கினர். ஜாரவா இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் போதைப் பொருள்களைக் கொடுத்து சுவைக்க வைத்தனர். ஜாரவா பெண்கள் சுற்றுலாப் பயணிகளால் பாலியல் வன்கொடுமை செய்யப்படும் சம்பவங்கள் நடந்தன. அதன் பிறகு சர்வைவல் என்னும் சர்வதேச பழங்குடியின பாதுகாப்பு அமைப்பும் இந்திய அமைப்புகளும் இணைந்து ஜாரவா மக்கள் பாதுகாப்புக்காகப் போராடின. அதன் பின் இந்திய அரசு விதிகளைக் கடுமையாக்கியது. 2002—ம் ஆண்டு அந்தமான் டிரன்க் சாலையை மூட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஆனால், இன்றளவும் அந்தச் சாலை பயன்பாட்டில் இருக்கிறது). நன்றி:விகடன்

## தமிழ்நாட்டில் தேசியத் தலைவரின் 64வது பிறந்தாள் விழா கொண்டாட்டம்




தமிழீழ தேசியத் தலைவரின் 64 வது பிறந்தாள் நிகழ்வு தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பழனியை அடுத்த மானூரில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ உணர்வாளர்கள் எழுச்சியுடன் பங்கேற்று தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவரும் ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ. மணி. தமிழர் வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தமிழர் விடியல் கட்சித் தலைவர் தோழர் டைசன் மற்றும் ஈழ உணர்வாளர்கள், மாணவர்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

### தேசியத்தலைவர் 64வது பிறந்தநாள்:

## அன்னைக்குப் பிள்ளைகளின் வாழ்த்துகள்! சீமான் பெருமிதம்!

தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 64ஆம் ஆண்டு பிறந்தநாளையொட்டி நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது, நம் சமகாலத்தில் நமது தாயக நிலமான ஈழம் சிங்கள பேரினவாத கரங்களுக்குள் சிக்கிக்கொண்டு தவித்தபோது வல்வெட்டித்துறையில் இருந்து அடிமை வரலாற்றை மாற்றி எழுத இந்த யுகம் இதுவரை பார்த்திராத பெரும் வீரர் தோன்றினார் .

அதுவரை அடிவாங்கி அடிவாங்கி அல்லலுற்ற அடிமை தமிழ்த் தேசிய இனம் தானாய் தோன்றிய அந்தத் தங்க மகனால் அடிமை விலங்குகளை அறுத்தெறிந்து விடுதலை என்ற லட்சிய இலக்குக்காகப் புரட்சிப் பாதையிலே எழுச்சியாக நடக்கத் தொடங்கியது. களம் பல கண்டு, கடல் பல கடந்து, இந்த உலகம் முழுக்கப் புலிக் கொடியை பறக்க வைத்த நமது முன்னோன் இராஜராஜ சோழனும் அவனது மகன் இராஜேந்திரசோழனும் கொண்டிருந்த வியத்தகு வீரத்தை நம் சமகாலத்தில் நம் விழிகளுக்கு முன்னால் நிகழ்த்திக் காட்டினார் நம் தேசியத் தலைவரும் என்னுயிர் அண்ணனுமாகிய மேதகு. வே.பிரபாகரன் அவர்கள். இனத்தின் விடுதலைக்காக.. தாய் நிலத்தின் அடிமை துயரைப் போக்க..மண்ணையும், கடலையும் ஆண்டால் போதாது.. விண்ணையும் வெல்ல



வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு வான்படை கட்டி, அந்த வானத்தையும் வசப்படுத்திக் காட்டினார் நம் தேசியத்

தொடர்ச்சி கீழே...

## 4 ரூபாய்க்கு முழு சாப்பாடு ஜெயலலிதா பாணியில் நடிகையின் உணவகம்!

4 ரூபாய்க்கு முழு சாப்பாடு தரும் உணவகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த உணவகத்தை கடந்த 2000 ஆம் ஆண்டுகளில் தமிழ், தெலுங்கு திரையுலகில் பிரபலமாக இருந்த நடிகை ரோஜா தனது சொந்த செலவில் திறந்துள்ளார். நடிகை ரோஜா தற்போது ஐ.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் சார்பில் நகரி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக உள்ளார். தனது தொகுதியில் உள்ள ஏழை எளிய மக்களின் பசியைத் தீர்க்க நடிகை ரோஜா கடந்த 17 ஆம் திகதி தனது பிறந்த நாள் அன்று மலிவு விலை உணவகத்தை திறந்துள்ளார். இந்த உணவகத்தில் முழு சாப்பாடு விலை ரூ.4 மட்டுமே. ஆந்திராவில் உள்ள அண்ணா கன்டீன், கர்நாடகாவில் உள்ள இந்திரா



கன்டீன், தமிழகத்தில் உள்ள அம்மா உணவகம் ஆகியவற்றைவிட ரோஜாவின் உணவகத்தில் சாப்பாட்டின் விலை குறைவாக உள்ளது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வரவுள்ள நிலையில் ரோஜாவின் இந்த உணவகம், அவருக்கு அதிகப்படியான வாக்குகளை பெற்றுக்கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை மறைந்த முன்னாள் தமிழக முதலவர் ஜெயலலிதா தொடங்கி வைத்த அம்மா உணவகத்தில் ரூ.1க்கு இட்லி, 2 சப்பாத்தி 3 ரூபாய், தயிர் சாதம் 3 ரூபாய், சாம்பார் சாதம் — புதினா சாதம் போன்றவை 5 ரூபாய் என விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேல் பக்கத் தொடர்ச்சி...

தலைவர். புலியை முறத்தால் அடித்து விரட்டி வீரத்தை புவிக்கே காட்டினாள் நமது முப்பாட்டி ஒருத்தி. ஆனால் என் அண்ணனோ அதையும் தாண்டி களம் வெல்லும் புலிகளை ஒரு படையாகக் கட்டி.. தாய்நில விடுதலை என்கின்ற உன்னதக் கனவை நிறைவேற்றினார் வெற்றிமுரசு கொட்டி.. இறுதிவரை களத்திலே மறத்தோடு நின்றாலும்.. அறம் நழுவாத தமிழர் மரபு சார்ந்த பெரும் குணங்களோடு, இனம் செழிக்க வந்த பேரரசனாய் ஈழம் என்ற பெரு நாட்டைக் கட்டி.. உலகம் வியக்க ஆண்டுக் காட்டியவர் நம் தேசியத் தலைவர்.

இன்று என் உயிர் அண்ணனும் நம் தேசியத் தலைவருமாகிய மேதகு வே பிரபாகரன் அவர்களது 64 ஆவது பிறந்தநாள். ஒவ்வொரு தமிழனும் தன் உடலை இறுக்கி பிடித்திருக்கிற அடிமை உணர்ச்சி விலங்கினை,தாழ்வு மனப்பான்மை இழிவினை உடைத்தெறிய தனது உள்ளத்துக்குள் உறைந்திருக்கும் ஆதி உயிர் உணர்வில் உசுப்பேத்திக் கொள்கிற உன்னத நாள். இந்தப் பூமிப்பந்தில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கண்கள் பனிக்க, இதயம் நெகிழ, தங்களது உன்னதத் தலைவனை எண்ணி நினைவுகளால் வாழ்த்துப்பூக்களை வாரி வீசுகிறார்கள். இந்த உலகம் இருக்கும் வரை, இந்த உலகில் இறுதித் தமிழன் இருக்கும் வரை நம் தேசிய தலைவர் தமிழனின் வீழாத வீரமாய் ..அகலாத அறமாய்..நம் தேசியத்தலைவர் உயிர்ப்புடன் வாழ்வார். வாழ்ந்தே தீருவார். உன் வாழ்வே எனது வழிகாட்டி. உன் சொற்களே எனது திசைகாட்டி. உலகம் முழுதும் பரந்து விரிந்து வாழும் 12 கோடி தேசிய இனமான தமிழர் அனைவருக்கும் நம் தேசியத் தலைவர், என் உயிர் அண்ணன் மேதகு வே பிரபாகரன் அவர்களது 64 ஆவது அகவை தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் நெஞ்சார்ந்த பெருமிதமும், உள்ளத்து பெருமையும் கொள்கின்றேன். இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளது

## கஜா புயலால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு நிவாரண உதவி வழங்கினார் பழ.நெடுமாறன்



அண்மையில் தமிழகத்தின் சில மாவட்டங்களைப் புரட்டிப்போட்ட கஜா புயல் ஈழத் தமிழர்களையும் விட்டுவைக்கவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள தேக்காட்டூர் ஈழத்தமிழர்கள் அகதிகள் முகாமில் உள்ள மக்கள் கடுமையான பாதிப்புகளை சந்தித்துள்ளனர். இவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த தமிழர் தேசிய முண்ணணியின் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் 750 கிலோ அரிசி, குடிநீர் மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்கி உதவினார். அப்போது மக்கள் தாங்கள் அனைத்தையும் இழந்து நிற்கதியாக நடுத்தெருவிலே நிற்பதாக கண்ணீர் மல்க வேதனையைத் தெரிவித்தனர்.

# ஈரானில் நிலநடுக்கம் 716 பேர் படுகாயம்



ஈரானின் மேற்கு பகுதியில், ஈராக் எல்லையை ஒட்டியுள்ள கெர்மன்ஷா மாகாணம், சர்போல் இ ஸகாப் அருகே நேற்று இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 என்ற அளவில் பதிவான இந்த நிலநடுக்கம் காரணமாக, கட்டிடங்கள் சேதம் அடைந்தன. மின் கம்பங்கள் சாய்ந்து விழுந்தன. இதனால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதியில் தஞ்சம் அடைந்தனர். இந்த விபத்தில்716க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்களில் பலருக்கு லேசான காயங்களே ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் மட்டுமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கம் தாக்கிய இடங்களில் 6 மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் ராணுவம் மற்றும் துணை ராணுவ வீரர்களும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## தாய்லாந்து நாட்டில் வினோத போட்டி!

தாய்லாந்தில் நடந்த பந்தயத்தில் கணவர்கள் தங்களது மனைவிகளை 3 கிலோமீட்டர் தூரத்திற்குத் தூக்கிச் சென்றனர்.

வருடா வருடம் தாய்லாந்தில் பல்வேறு பந்தயங்கள் நடைபெறுவது வழக்கம். அதிலும் குறிப்பாகத் தம்பதியர்களுக்காக நடக்கும் ஓட்டப் பந்தயம்தான் முக்கியமானது.

3 கிலோ மீட்டர் கொண்ட இந்த ஓட்டப்பந்தயத்தில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தை கடக்கும் மனைவிகளை அடுத்த ஒரு கிலோ மீட்டருக்குக் கணவர்களைத் தூக்கிச் செல்ல வேண்டும்.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு தேன் நிலவுக்கான 42 லட்சம் மதிப்பிலான பரிசுக் கூப்பன் வழங்கப்படும். இதனை ஒரு ஜோடி தட்டிச் சென்றது.

## ஆப்கானிஸ்தானில் தாலிபன் தாக்குதலில் காவல்துறையினர் 22 பேர் பலி!



ஆப்கானிஸ்தான் நாட்டின் பரா மாகாணத்தில் அன்நாட்டு காவல்துறையினரின் ஊர்திகள் மீது இலக்குவைத்து தலிபான் அமைப்பு போராளிகள் நடத்திய தாக்குதலில் 22 காவல்துறையினர் உயிரிழந்துள்ளார்கள். கடந்த 23.11.18 அன்று பரா மாகாணத்தில் உள்ள யுவைன் மாவட்டத்தில் அன்நாட்டு காவல்துறையினரின் வாகன அணி ஒன்றின் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தலிபான் அமைப்பினர் இலக்குவைத்து நடத்திய இந்த தாக்குதலில் காவல்துறையினரின் வாகனங்கள் நான்கு மோசமாக சேதடைந் துள்ளதுடன் 22 காவல்துறையினர் உயிரிழந்துள்ளார்கள். ஆப்கானிஸ்தானில் தொடர்சியாக அரச படைகளை இலக்கு வைத்து தலிபான் அமைப்பினர் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்மஸ் தாத்தா ஆணா பெண்ணா? வெடித்தது சர்ச்சை

ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இனிப்பு வழங்கி மகிழ்விக்க ஊர்வலம் வருவது வழக்கம். கிறிஸ்மஸ் பண்டிகையை கிறிஸ்துவர்கள் உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடத் தயாராகி வரும் இந்த வேளையில்



நேற்றிரவு நியூசிலாந்து நாட்டில் சர்ச்சை ஒன்று வெடித்துள்ளது.கிறிஸ்துமஸ் தாத் தாவாக ஆண்களே வேடமிட்டு ஊர்வலம் வந்துகொண்டிருந்த நிலையில் ஏன் பெண்கள் வேடமிடக் கூடாது என்று ஒரு பெண் சர்ச்சையை கிளப்பியுள்ளது பூதாகர மாகியுள்ளது. இதுகுறித்து வழக்கு ஒன்றும் அந் நாட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட உள்ள தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இனி உங்கள் தெருவுக்கும் கிறிஸ்துமஸ் பெண் தாத்தா ஒருவர் உங்களுக்கு இனிப்பு மிட்டாய்களை வழங்க வந்தாலும் வரலாம்.

# அமெரிக்காவில் கடும் பனிப்புயல்:1600 விமானங்கள் ரத்து

அமெரிக்காவில் தற்போது குளிர்காலம் என்பதால் பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. இந்நிலையில், மத்திய அமெரிக்காவில் நேற்று முதல் கடும் பனிப்புயல் வீசி வருகிறது. இதனால் பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சாலைகளில் பனி சூழ்ந்து காணப்படுவதால் வாகனங்களை இயக்க முடியவில்லை. முக்கிய நெடுஞ் சாலைகள் மூடப்பட்டுள்ளன.

மத்திய மேற்கு மாநிலங்களில் பனிப்புயல் காரணமாக இன்று 10 அங்குலம் அளவிற்கு பனிப்படலம் படர வாய்ப்பு இருப்பதாகவும், சில மாநிலங்களில் 12 அங்குலம் அளவிற்கு பனிப்படலம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இன்று பனிப்புயல் வடமேற்கு மாநிலங்களை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பனிப்புயல் காரணமாக அமெரிக்காவின் பல்வேறு விமான நிலையங்களில் இருந்து இயக்கப்படும் 1600க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சிகாகோ சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அதிகபட்சமாக 770 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 15000 விமானங்கள் மிகவும் தாமதமாக புறப்பட்டு செல்கின்றன.

பனிப்புயல் தாக்கும் என அறிவிக்கப்பட்ட மாநிலங்களில் 1.4 கோடி மக்கள் வசிக்கின்றனர். கடுமையான காற்று வீசும் என எச்சரிக்கை



விடுக்கப்பட்டுள்ள கன்சாஸ், மிசவுரி, நெப்ரஸ்கா, அயோவா மாநிலங்களில் 2 கோடி மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## நியூசிலாந்தில் 145 திமிங்கலங்கள் இறந்ததால் மக்கள் பீதி

வெலிங்டன்: நியூசிலாந்து நாட்டில் உள்ள ஸ்டீவர்ட் தீவில், மேசன் பே எனும் கடற்கரை பகுதியில் 145 'பைலட்' இன திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இப் பகுதியில் ஏற்கனவே பல முறை ஒன்றிரண்டு திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கியுள்ளன. ஆனால் இந்த அளவில் அதிகமான திமிங்கலங்கள் இறந்து கரை ஒதுங்கியுள்ளது அப்பகுதி மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஸ்டீவர்ட் தீவின் கடற் கரையில் திமிங்கலங்கள் கரை ஒதுங்கியுள்ளதாக தகவல் அறிந்த அதிகாரிகள் அங்கு சென்று பார்த்தபோது பாதி திமிங்கலங்கள் ஏற்கனவே இறந்திருந்தது தெரிய வந்தது.

திமிங்கலங்கள் இறந்ததற்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. மேலும் இறந்த திமிங்கலங்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலகின் மிகப்பெரிய குடும்பம்

உலகின் மிகப் பெரிய குடும்பம் என்ற பெருமையை மிசோரத்தை சேர்ந்த குடும்பம் தக்கவைத்து கொண்டுள்ளது. பேக்டௌங் பகுதியைச் சேர்ந்த Ziona Chana என்பவருக்கு 39 மனைவிகள்



திருமணம் செய்வதை நிறுத்திக் கொண்டார். இவர் இதுவரை 94 குழந்தைகளை பெற்றுள்ளனர். தனது மகன்களுக்கு திருமணம் செய்ததன் மூலம் 14 மருமகள்கள்

உள்ளன. சியோனாவுக்கு 15 வயது இருக்கும் போது முதல் திருமணம் நடந்தது. 1959ம் ஆண்டு தொடங்கிய இந்த திருமண வாழ்க்கை, மணிவிழா கொண்டாடிய 60 வயது வரை நீடித்தது. ஒருசில ஆண்டுகளைத் தவிர ஆண்டுக்கு ஒரு பெண்ணை திருமணம் செய்துள்ளார். கடைசியாக 2004ல் திருமணம் செய்து கொண்டார். அதன்பிறகு

உள்ளன. அத்துடன் 33பேரக்குழந்தைகளுடன் ஒரே குடும்பமாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் ஓட்டல் போன்ற 4 அடுக்கு மாடியில் 100 அறைகள் கொண்ட வீட்டில் அனைவரும் ஒற்றுமையாக வசித்து வருவது மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. இவர்களைக் காண ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.